Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 என் கைகளைப் போருக்கும்..... படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சங்.144:1 ஜூன் 2019 No.6

இந்தியாவுக்கு வந்த Dr.ஜான் ஸ்கடர் என்ற மருத்துவ மிஷனெரி *(பகுதி - 3)*

Dr. John Scudder : Medical Missionary to India (Part -3)

Miss. Belle M. Brain

நியூயார்க் பட்டணத்தில் சிறந்த ஒரு மருத்துவராகப் பணியாற்றிய Dr. ஸ்கடர் மனைவி ஹாரியெட்டுடன் 1819 ஜூன் மாதம் சுவிசேஷம் அறிவிக்க இலங்கை வந்தார். ஒரு சிறந்த மருத்துவ ரென்ற பெயர் பரவியதால் திரளான மக்கள் அவரைத் தேடி வந்தனர். எனவே கூட்டம் கூட்டமான மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்குப் பிரயாணம் பண்ணிச் சென்றார். அதிக தூர பிரயாணங்களாலும், இடைவிடாத உழைப்பாலும் மற்றும் அதிக வெப்ப மான காலநிலையாலும் அவரது உடல் நலம் குன்றியது. 1829-ல் கவலைக் கிடமான நிலையில் அவர் நீலகிரிக்கு அனுப்பப்பட்டார். ஒரு வருட காலத்திற்குப் பின்பு சற்று சுகமடைந்து திரும்பி வந்தார்.

இந்தியாவின் விஸ்தாரம், வேலையாட்களின் குறைவு ஆகிய காரணங்களால் சென்னையில் 1836-ம் ஆண்டு ஒரு புதிய நிலையத்தை Rev. மைரான் வின்ஸ்லோவுடன் சேர்ந்து ஆரம்பித்தார். இலங்கைப் பணி மீது விருப்பமிருந்தாலும் இந்தப் பரந்த நிலத்தை அவர் அதிகமாக விரும்பி பணியில் அதிக ஆர்வத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

இலங்கையைப் போல இங்கும் திட்டமிடும் பணி அதிகமாயிருந்தது. ஒரு பெரிய அச்சகமும் திறக்கப்பட்டது. Rev. வின்ஸ்லோ அதன் பொறுப்பை எடுத்துக் கொண்டார். அதே சமயத்தில் Dr. ஸ்கடர் மாட்டு வண்டியில் நீண்ட பிரயாணம் செய்து நாட்டின் உட்பகுதிகளுக்குச் சென்று பிரசங்கிக்கவும், துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கவும் ஆரம்பித் தார். அது மிகவும் கடினமான பணி. அவர் சந்திக்காத இடங்களில்லை. சுவிசேஷப் பிரதிகள் அதிகமாக வினியோகிக்கப் பட்டன. ஒருமுறை உணவு உண்ணா மலேயே தொடர்ந்து பதினொரு மணி நேரங்கள் ஒரே இடத்தில் நின்று அவற்றைக் கொடுத்திருக்கிறார்.

அவர் வீட்டிற்கு அனுப்பிய கடிதங்கள்

சென்னையில் கணவரைப் பிரிந்து தனியாக இருந்தது ஸ்கடர் அம்மையாருக்குக் கடினமாயிருந்தது. தன் கணவர் எப்படியிருக்கிறார் என்று கூட பலவேளைகளில் அறிய முடியாம லிருந்தது. இந்நாட்களில் அவர்களுக் கிருந்த தொடர்பை இரு கடிதங்கள் மூலம் அறியலாம். Dr. ஸ்கடரின் உண்மை யான குணத்தையும் அவை வெளிப் படுத்துகின்றன.

1838 ஜூன் 27 - "நீயும் பிள்ளை களும் சுகமாயிருப்பீர்கள் என்று நம்பு கிறேன். நான் தூரமாயிருக்கும் போது என் அன்பு மனைவியே நீ சந்தோஷ மாயிரு. தேவ நாம மகிமைக்காகப் பாடுபடுவதற்காக நாம் களிகூர வேண்டும். நான் வீட்டில் உங்களோடு இருப்பதை விட இப்போது உங்கள் ஜெபங்கள் அதிகமாயிருப்பதால், தெய் வீக ஆசீர்வாதங்கள் எனது உழைப்பில் இருப்பதை எண்ணி சந்தோஷப்படு கிறேன். ஆண்டவருக்குள் உன் இருதயத்தைத் திடப்படுத்திக் கொள். நானும் அப்படியே செய்கிறேன். கிருபை யில் வளருவாயாக. அதனால் நான் தூரமாயிருந்தாலும் மகிழ்ச்சியடையலாம்."

1839 டிசம்பர் 29 - நான் உன்னை விட்டுதூரமாயிருந்தாலும் எனது வாயின் வார்த்தைகளால் இயேசுவை அறிந்து கொண்டிருக்கும் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களின் எண்ணிக்கையை எண்ணி ஆறுதலும் சந்தோஷமும் அடைவாயாக. ஏதோ ஒரு பெண்ணின் கணவர் தனது மனைவியை தூரமான இடத்தில் விட்டுவிட்டு, இதுவரை ஆண்டவரை அறியாத மக்களுக்கு சுவிஷே வசனத்தைப் பகிர்ந்து அளிக்கும் போது, அப்படிப்பட்ட மக்களில் நீயும் ஒன்றாயிருந்தால் எப்படி சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வாய்! எனவே எனது அன்பை அவர்களிடம் காண்பி.

பத்திரமாகப் பாதுகாக்கப்படுதல்

இந்தியாவின் காடுகளில் ஊழியத்திற்காகப் பிரயாணம் பண்ணிய அவருக்குக் கொடிய விஷக்காய்ச்சல் ஏற்பட்டது. அவருடைய காய்ச்சல் அதிகரித்தபடியால் மனைவி துக்க மடைந்தார்கள். அவர்கள் இங்கு அழைக்கப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் உடனே சிறிய மகனோடு புறப்பட்டு வந்தார்கள். விரைவாக வந்து சேருவதற்காக அவர்கள் இரவு பகல் பாராமல் காட்டு விலங்குகள் நிறைந்த பகுதிகள் வழியாகக் கடந்து வர வேண்டியதாயிற்று.

இருநாள் இரவில் இருண்ட காட்டுப் பகுதியில் வந்த போது காட்டு விலங்குகளின் பயங்கர சத்தத்தைக் கேட்டு, அவர்களது பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் அதனை அப்படியே விட்டுவிட்டு ஓடி மறைந்தனர். அந்த நள்ளிரவில் தனியாகக் காட்டில் விட்டுவிடப்பட்ட அவர்களுக்கு தேவன் மட்டுமே பாதுகாவல். அந்த பயங்கர மான இரவை அவர்கள் ஜெபத்தில் செலவு செய்தனர். அடிக்கடி யானை களின் காலடி ஓசைகளும், புலி போன்ற கொடிய விலங்குகளின் ஓலங்களும் மிக அருகில் கேட்டன. ஆனால் தேவன் தமது தூதர்களை அனுப்பி அவர்களைப் பாதுகாத்துக் கொண்டார்.

பொழுது விடிந்தபோது பல்லக்கைத் தூக்கிச் சென்றவர்கள் திரும்பி வந்தனர். பிரயாணம் தொடர்ந்தது. Dr. ஸ்கடரிடம் வந்தபோது அவரது உடல்நிலை இக்கட்டான நிலையைக் கடந்திருந்தது. ஆயினும் அவர் சரியாக குணமடைய பல மாதங்களாயின.

சுகமும் தொடர்ந்து வந்த துக்கமும்

1843-ம் ஆண்டு இலங்கையிலும் இந்தியாவிலுமாக 23 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது அவர் பணி செய்ய முடியாத நிலைக்கு வந்து விட்டார். விஷக் காய்ச்சலின் விதைகள் அவர் உடலில் காணப்பட்டன. வெயிலின் தாக்கம் தாங்கமுடியாத தலைவலியை அவருக்கு தந்தது. அவரது வலது கரமும் செயலற்றுப் போனது. எனவே அமெரிக்கா திரும்ப சம்மதித்தார். ஏப்ரல் 1-ம் நாள் மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுடன் அவர் சென்னையிலிருந்து கப்பலேறினார். மூத்த ஆறு பிள்ளைகளும் ஏற்கெனவே அமெரிக்கா வந்து கல்வி பயின்று கொண்டிருந்தனர். ஆகஸ்ட் பதினோ ராம் நாள் அவர் பிலதெல்பியா வந்து சேர்ந்தார்.

இளைப்பாறுவதற்காக வந்த அவர் சோம்பலாக இருக்கவில்லை. இங்கும் ஆத்தும ஆதாயத்திற்காக சுறுசுறுப்பாக செயல்பட்டார். அவரது மகன் அவரைக் குறித்து, "அவரோடு தொடர்பு கொண்ட அனைவரோடும், அவர்களுடைய ஆத்துமாவைக் குறித்து பேசுவது வழக்கம். அந்த நபர் கூலி வேலை செய்பவராகவோ, வியாபாரி யாகவோ, உத்தியோகம் செய்பவ ராகவோ, அன்னியராகவோ, வெள்ளை யராகவோ, கறுப்பராகவோ, குழந்தை யாகவோ, பெரியவராகவோ, பணக்கார

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com
அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

இம்மாத பொன்னான சிந்தனை

உலைக்களத்திற்காய் தேவனைத் துதியுங்கள். தேவன் அக்கினியில்தான் உங்களோடு உலாவ உவகை கொள்கிறார். அதிலிருந்து வெளிவரும்பொழுது உங்கள் கட்டுகள் மட்டுமே எரிந்து போயிருப்பதைக் காண்பீர்கள்.

வாக்குத்தத்தம்

"அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" எபிரேயர் 2:18.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஜூன் மாத வருகையின் தூதன் பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். உண்மையை சொல்லுகிறேன், நல்ல ஆரோக்கியம் இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்த ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

மேய் மாதம் 16-ம் தேதி இரவு ரயில் மூலமாக திருப்பூர் சென்றோம். **17.05.2019** *வெள்ளிக்கிழமை ஆண்டவருக்கு மகிமையாக, சபைக்கு பிரயோஜனமாக* **எழுப்புதலுக்காக இதய கதறல்** *7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்த அன்பின் ஆண்டவர் பெலப்படுத்தினார். சுமார் 300 பேர்கள் கலந்து கொண்டார்கள் என்று எண்ணுகிறேன். அருமையான சபை மக்களுக்காகவும், எங்களை மிகவும் அன்புடன் வரவேற்று, உபசரித்து, பயன்படுத்தின சபை போதகர்* ***Pr.* பரமானந்தம்** *அவர்களுக்காகவும், குடும்பத்தினருக்காகவும் அடியேன் தேவனை மகிமைப்படுத்துகிறேன்.*

அங்கிருந்து உடனே சென்னை சென்றேன். தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு 19-ம் தியதி ஞாயிறு அழைப்பின் எதிரொலி தேவ சபையில் 7.00 மணி மற்றும் 10.00 மணி ஆராதனைகளில் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தேன்.

21-ம் தேதி செவ்வாய்கிழமை சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். பரிசோதனைகளுக் காகவும், சரீர தகுதிக்காகவும் சுமார் 2 வாரம் தாமதிக்க வேண்டியதாயிற்று.

ஜூன் மாதம் 4-ம் தியதி அறுவை சிகிட்சை செய்யப்பட்டது. சுமார் 10 நாட்களில் டிஸ்சார்ஜ் ஆனேன். முன்பு போல 16-ம் தியதி சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாக 17.06.2019 திங்கள்கிழமை நாகர்கோவில் வந்து சேர்ந்தேன்.

மிகவும் வேதனையோடு விசாரித்த, போராடி ஜெபித்த தேவனுடைய பிள்ளைகள், வாசகர்கள், உடன் ஊழியர்கள், உறவினர்கள், தங்கள் சபையில் அறிவித்து ஜெபித்த மரியாதைக்குரிய சபை போதகர்கள் யாவருக்காகவும் என் தேவனை நன்றியுடன் துதிக்கிறேன். தொடர்ந்து அடிமைக்காக ஜெபியுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

ஆசிரியர் : 94980 30295
உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
Heart cry for Revival Chennai 2020

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	18.01.2020 3-வது சனி	Elohim Apostolic Church Pudichur, Chennai
பெப்ரவரி		
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

குறிப்பு : சென்னையிலுள்ள போதகர்கள், ஒரே ஒரு விசை உங்கள் சபை கட்டிடத்தை எழுப்புதலுக்காக இதய கதறல் 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள் என அன்பாய் கேட்கிறேன்.

தொடர்பு : **95432 21008, 94897 40295**

தேவபயமுள்ள பெற்றோரால் ஏற்படும் தாக்கம்
The Impact of Godly Parenting

W.B.Sprague

பிள்ளைகளின் குணங்களை உருவாக்குவதில் பெற்றோருக்கு இணையானவர்கள் எவருமில்லை. அவர்கள் பிள்ளைகளை நல்ல தாக்கங்களோடு நடத்தினால் சந்தோஷ மான பலன்களை பிள்ளைகளின் வாழ்வில் காணமுடியும்.

நீதி.22:6-ன் படி பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வேதவசனத்தின் படி நடத்த வேண்டும். போதனைகளை புரிந்து கொள்ளும் பருவத்திலேயே தேவ வசனத்தின் சத்தியங் களை உத்தமமாகப் போதிக்க வேண்டும். போதனைகள் அறிமுகமானவைகளாகவும் செயல் படுத்தப்படக் கூடியவை களாகவும் இருக்க வேண்டும். ஆலோசனைகள், கட்டளைகள் போன்றவைகள் கலந்து கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைக ளோடு சேர்ந்து ஜெபிப்பதும், ஜெபிக்க அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதும் ஜெபிக்க வைப்பதும் அவசியம். இவை உடனேயே பலன் கொடுக்காவிட்டாலும் காலப்போக்கில் அவர்கள் கிறிஸ்து விடம் நடத்தப்பட அனுகூலமாயிருக்கும். தேவனுடைய தூய ஆவியானவர் அவர்களில் கிரியை செய்ய இது ஒரு சந்தோஷமான ஆயத்தமாகும்.

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பங்கள், குடும்பத்தின் பெற்றோர் காட்டிய கிறிஸ்தவ முன்மாதிரியால் ஏற்பட்டது என்பதை தூய ஆவியானவர் அதிக வல்லமையாக செயல்படும் இடங்களில் கண்டு அறியலாம்.

வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம்.
ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.

வங்கி கணக்கு :

பத்திரிகை : **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

உபவாச ஜெபம் : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182

(1-ம் பக்க தொடர்ச்சி)

ராகவோ, ஏழையாகவோ இருந்தாலும் அவர்களிடம் இயேசுவைக் குறித்தும் இரட்சிப்பைக் குறித்தும் அவர்களிடம் பேசுவார். அவர்களில் அனேகர் மனந் திரும்ப தேவன் அவரை பயன்படுத்தினார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் இவ்வாறு நல்ல பணி செய்து சந்தோஷமாகக் காணப்பட்டார். ஆயினும் இந்தியாவையும் அங்கு செய்யப்பட வேண்டிய பெரிய ஆத்தும அறுவடையையும் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார். "இந்தியாவைப் போன்ற நல்ல இடம் வேறு எதுவுமில்லை" என்று அடிக்கடி கூறுவார். நான்கு ஆண்டுகளுக்கு பின் உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே இந்தியா வரத் தீர்மானித்தார். 1846-ம் ஆண்டு நவம்பர் 18-ம் நாள் தன் மனைவியுடன் சென்னை புறப்பட்டு மார்ச் 1847-ல் வந்து சேர்ந்தார். உடனே சுறுசுறுப்புடன் பணியைச் செய்ய ஆரம்பித்தார்.

மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பெரிய துக்கம் அவருக்கு ஏற்பட்டது. 1849 நவம்பர் 19-ம் நாள் முப்பது ஆண்டுகளாக அவருக்கு ஆறுதலும் சந்தோஷமுமாயிருந்த அன்பு மனைவி ஹாரியெட் நோய்வாய்ப்பட்டு சில நாட்களுக்குள் மரித்துவிட்டார்கள். இந்த துக்கம் ஆறுவதற்கு முன்பாக அன்பு மகன் சாமுவேல் தாயாரின் மரணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக மரித்துப் போனதாக செய்தி வந்தது. அவன் பிரின்ஸ்டன் வேதாகமக் கல்லூரியில் ஊழியத்திற்காகப் படித்துக்கொண்டிருந்தான்.

இத்தனை துயரங்கள் வந்தும் திட நெஞ்சரான Dr. ஸ்கடர் தேவ பணியில் தளர்ந்து போகவில்லை. நான்கு ஆண்டுகளானபோது அவர் மிகவும் பலவீனமடைந்தபடியால் மறுபடியும் அமெரிக்கா திரும்ப வேண்டியதாயிற்று. "நான் இந்தியாவிலேயே மரித்து எனது மனைவியண்டை அடக்கம் பண்ணப்பட விரும்புகிறேன்" என்று கூறி அவர் அமெரிக்காக செல்ல மறுத்தார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு ஒரு குறுகிய கால யாத்திரை செய்ய அவர் இசைந்தார். 1854-ம் ஆண்டு ஜோஸப் என்ற மகனுடன் அங்கு சென்றடைந்தார். அந்த யாத்திரை மிகவும் பயனுள்ள தாய் அமைந்தது. எனவே அங்கு சென்றதும் கிறிஸ்துவை பிரசங்கிக்க ஆரம்பித்தார். கூட்டம் கூட்டமாய் மக்கள் வந்து சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் இந்த சந்தோஷமானதும் ஆசீர்வாதமானதுமான உழைப்பின் மத்தியில் 1855 ஜனவரி 13-ம் நாள் பரம வீட்டை அடைந்துவிட்டார். அன்று பிற்பகல் நடக்கவிருந்த ஒரு ஆராதனைக்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த அவர் ஒருபோதும் விழிக்காத ஆழ்ந்த நித்திரையடைந்தார்.

ஒரு தெய்வீகப் பரம்பரை

Dr. ஸ்கடர் அவரது மனைவி இருவரையும் குறித்துப் பேசும்போது, அவர்கள் உருவாக்கிய மிஷனெறிக் குடும்பத்தைக் குறித்துக் கூறாமலிருப்பது சரியல்ல. அவர்களது பிள்ளைகள் மொத்தம் பதினான்கு. அவர்களில் நான்கு பேர் மரித்துவிட்டனர். மற்ற பத்து பேரும் தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டு, அவரது பணியினைச் செய்ய கருத்தாய் வளர்க்கப்பட்டனர். அவர்களது பிறந்த நாட்கள் வரும்போது அவை விசேஷித்த உபவாச நாட்களாக ஆசரிக்கப்பட்டன. பெற்றோர் இருவரும் தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக மட்டுமல்ல மிஷனெரிகளாகவேண்டுமென்ற வாஞ்சையுடன் வளர்த்தனர். ஒவ்வொருவராக எட்டுபேர் இந்தியாவில் ஊழியம் செய்யும் பயிற்சிக்காக அமெரிக்கா அனுப்பப்பட்டனர். அவர்களுடைய விசுவாசம் மிகுந்த பலனை அளித்தது.

சிலுவை என்பது தேவனுடைய அன்பின் செய்தி

The Cross : A message of God's Love

Rich Carmicheal

"ஒருவன் தன் சினேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை" யோவா.15:13.

அவரது சிலுவை மரணம் நெருங்கி வந்தபோது அச்சிலுவை கொண்டுவரவிருக்கும் அதிக அளவிலான பாரத்தை இயேசு உணரத் தொடங்கினார். சிலுவையை சகிப்பது அதிக அளவிலான சரீர, உணர்ச்சிபூர்வ மற்றும் ஆவிக்குரிய வேதனையை அளிக்கும் என்பதை அவர் நன்கு அறிவார். சிலுவை மரணத்தின் முந்திய இரவில் கெத்சமனே தோட்டத்தில் வியாகுலப்பட்டு ஜெபித்தார். அந்த விசேஷித்த இடத்தில் அவர், "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்". பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய சீடரிடம், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி என்னோடே கூட விழித்திருங்கள்" என்றார் மத்.26:37-38. பின்பு "சற்று அப்புறம் போய் முகங்குப்புற விழுந்து என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" மத்.26:39. பாடுகளின் கசப்பு நிறைந்த பாத்திரம் அவருக்கு முன்னாலிருந்தது. அது அவரால் சகிக்கக் கூடாததாயிருந்தது. "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது" லூக்.22:44. அந்த ஆழமான உறவின் வேளையில் தமது பிதாவின் சித்தத்திற்குத் தம்மைப் பூரணமாய் ஒப்புவித்துவிட்ட உறுதியைப் பெற்றார். மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் அவர் கீழ்ப்படிந்தார் என்று பிலி.2:8-ல் படிக்கிறோம்.

சிலுவையிலறையப்படுவதற்கு முன்னால் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் சகலவித வேதனைகளையும் அவர் சந்தித்தார் என்பதை வெளிக்காட்டுகின்றன. தனது சீஷர்களில் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டார். மற்ற சீஷர்கள் அவரைத் தனியாகவிட்டு ஓடிப்போயினர். அவர் கைது செய்யப்பட்டு, கட்டப்பட்டவராய், பொய்யான குற்றச்சாட்டுகளுக்கும், அநீதியான விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டார். மக்கள் அவர் முகத்தில் துப்பினார்கள். சிலர் அடித்தார்கள். கன்னத்தில் அறைந்து எள்ளி நகையாடினார்கள். பிலாத்துவின் முன் நிறுத்தப்பட்டபோது வாரினால் அடிக்கப்பட்டார். பின்பு சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டார். கூட்டமாக நின்ற போர்ச் சேவகர்கள் அவரை நிந்தித்தனர். ஒரு அங்கியைப் போர்த்தி, தலையில் முட்கிரீடத்தை சூட்டி, வலது கரத்தில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக பணிந்து 'யூதருடைய ராஜா' எனக் கேலி செய்தனர். தடியினால் அவரது சிரசில் பலமுறை ஒங்கி அடித்தனர். மறுபடியும் அவரது ஆடைகளை அணிவித்து சிலுவையிலறையும்படி கொல்கொதா அழைத்துச் சென்றனர். அங்கு ஆணிகளால் கரங்களையும், கால்களையும் சிலுவையிலடித்து இவ்வாறு சிலுவையிலறைந்தனர்.

இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்ற சில மக்களும் எள்ளி நகைத்து வசைச் சொற்களை வீசினர். அவரது இரு பக்கங்களிலும் இரு கள்ளர்கள் இரு சிலுவைகளில் அறையப்பட்டவர்களாக அவரை நிந்தித்தனர். அது நடுப்பகல் வேளையாயிருந்தும் மூன்று மணிநேரம் தொடர்ந்து காரிருள் சூழ்ந்தது.

"..... அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" 1 பேதுரு 2:24. இது மிகவும் கடினமானது. ஏசாயா இதனைக் குறித்து விவரிப்பதை ஏசா.53:4-12 வசனங்களில் வாசிப்போம். "கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" கலா.3:13. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" 2 கொரி.5:21.

இயேசு நமது பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்ட போது பாவ பாரத்தின் அனைத்து விளைவுகளையும், பிதாவிடமிருந்து தனித்து விடப்படும் அனுபவத்தையும் பெற்றார். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்" மத்.27:46 என்று மிகவும் சத்தமாகக் கூப்பிட்ட அவர், சிறிது நேரத்தில் "பிதாவே உம்முடைய கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி தமது ஆவியை விட்டார் லூக்.23:46.

இத்தனை பெரிய தியாகம் எதற்கு?

ஏன் கிறிஸ்து இத்தனை பாடுகளையும் ஏற்று சிலுவையில்

(3-ம் பக்க தொடர்ச்சி)

மரிக்கத் தம்மை ஒப்புக்கொடுத்தார்? இந்த பெரிய கிரயம் செலுத்த பரமதந்தை தமது மகனை ஏன் அனுப்பினார்? பிதாவும் குமாரனும் இதற்கு துணிய பல அற்புதமான காரணங்கள் உண்டு. சிலுவையின் மூலமாகவே பாவ மன்னிப்பை அருள முடியும் மத்.26:28; எபி.9:22-28. மீட்பையும் அருளக்கூடும் எபே.1:7; 1 பேது.1:18-19; வெளி.5:9. நம்மை நீதிமான்களாக்கியதும் சிலுவை ரோமர் 5:9. சமாதானத்தையும், ஒப்புரவாக்குதலையும் ஏற்படுத்தியது ஏசா.53:5, ரோமர் 5:10, கொலோ.1:20, 1 பேது.3:18, பாவ உணர்வு பாவத்தின் வலிமை ஆகியவற்றிலிருந்து விடுதலை தந்தது ரோமர் 6:5-7, எபி.9:14-15; மரண பயத்திலிருந்து விடுவிக்கிறது; எபி.2:14-15. ஆரோக்கியமளித்தல் ஏசா.53:5; தூய்மையாக்குதல் எபி.13:12; கர்த்தரோடுள்ள நித்திய வாழ்வு யோவா.3:16 1 தெச.5:10 போன்ற யாவையும் பெற்று அனுபவிக்க இந்தப் பெரிய தியாகம் தேவையாயிருந்தது.

ஆயினும் சிலுவையின் மிக முக்கிய நோக்கமும், பிற காரணங்களுக்கான அஸ்திபாரமும் 'ஆண்டவர் நம்மை நேசிக்கிறார்' என்ற சத்தியத்தில் அடங்கியுள்ளது. ஆக சிலுவையின் செய்திச் சுருக்கம், 'ஆண்டவர் உங்களையும் என்னையும் நேசிக்கிறார்' என்பதே.

கீழ்க்காணும் வசனங்களை மனதில் பதித்துக் கொள்வோம் யோவா.3:16; ரோமர்.5:8; கலா.2:20; யோவா.15:13; 1 யோவா.3:16; 1 யோவா.4:9; வெளி.1:5.

நாம் நமது கண்களை சிலுவைக்கு நேராக ஏறெடுக்கும் போது, ஆண்டவர் நம்மிடம் காண்பித்த அன்பின் பெருக்கத்தை தெளிவாகவும் வல்லமையாகவும் காணலாம். பிதாவின் மிகப்பெரிய ஈவாக மனிதகுல இரட்சிப்புக்காக தேவன் தமது ஒரே பேறான குமாரனை அளித்தது அங்கு விளங்குகிறது. குமாரனாகிய தேவ ஆட்டுக்குட்டி தமது விலையேறிய இரத்தத்தை சிந்தி நமது பாவங்களை மன்னித்து நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியதும் தென்படுகிறது. தமது ஜீவனைத் தவிர வேறு எதை அவர் கொடுக்க முடியும்! அவர் நம்மை மிகவும் அதிகமாக நேசிக்கிறார்.

''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடும்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன் எபேசி.3:17-19.

••••••

அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை

The power of His resurrection

Charles H. Spurgeon

"..... இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிகிறதற்கும்....." பிலி. 3:10.

பவுல் அறிந்து கொள்ள ஆவலாயிருந்ததெல்லாம் ஆண்டவரோடு தொடர்புடையவைகள் மட்டுமே. முதலாவது அவரை அறியவும், பின்பு அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிய அவர் வாஞ்சித்தார். ஆண்டவராகிய இயேசு தான் எல்லாவற்றிற்கும் ஆதாரம். அவரை விட்டு விட்டு தத்துவங்களையும், உபதேசங்களையும், அனுபவங்களையும் படிப்பதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். கிறிஸ்துவற்ற உபதேசங்கள் அவரது வெறுங்கல்லறைகளே. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட உபதேசங்கள் மகிமையான உயர்ந்த சிங்காசனத்தில் அரசன் வீற்றிருப்பது போன்றது. கிறிஸ்துவற்ற பிரமாணங்கள் செய்யக்கூடாதவைகளாகவும், ஆனால் இயேசுவின் உதடுகளிலிருந்து வெளிவந்த கருத்துக்கள் இருதயத்தை உயிர்ப்பிக்கிறவைகளாகவுமிருக்கின்றன. அவரன்றி உங்களால் எதுவும் செய்யக்கூடாது. அவரில் நிலைத்திருந்தால் அதிகக் கனிகளைத் தர முடியும். எப்போதும் உங்கள் பிரசங்கமும் கேள்வியும் சொந்த இரட்சகரை நோக்குவதாயிருக்கட்டும். அது நமது பிரசங்கத்தில் அதிக வேறுபாட்டை ஏற்படுத்தும் ஊழியக்காரர்கள் சுத்தமான உபதேசத்தை அபிஷேகமின்றி கொடுக்கலாம். ஆனால் ஆண்டவரோடுள்ள தொடர்போடும் ஆவியின் அபிஷேகத்தோடும் சொல்லப்படும் உபதேசங்களுக்கு ஈடாக எவையுமிருக்க முடியாது. கிறிஸ்துவும் அவ்வாறே தூய ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு உத்தம ஊழியர்.

ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல் வல்லமையின் ஒரு அற்புத வெளிப்பாடு. அப்போஸ்தலர் இந்த வல்லமையை அறிந்துகொள்ள அதிகமாக விரும்பினர். இந்த வல்லமை மகா விஸ்தாரமானது. இதனை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் வல்லமை ஒரு சான்றின் வல்லமை:

ஒரு உடன்படிக்கையை உறுதிப்படுத்த பயன்படுத்தும் ஒரு முத்திரைக்கு இதனை ஒப்பிடலாம். அவர் மேசியா என்பதற்கு அவரது உயிர்த்தெழுதல் சான்று. அவர் பிதாவின் பணியை நிறைவேற்ற வந்தவர் என்பதும் அவரே தேவகுமாரன் என்பதும், யெகோவாவுடன் செய்த உடன்படிக்கை மூலம் நிறைவேறியது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. "..... தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்" ரோமர் 1:5. "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்" அப்.13:32-33 என்று பவுல் அந்தியோகியாவில் கூறினார்.

ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்ட ஒருவரும் அவரது தெய்வீகத் தன்மையையும், அவர் பூமியில் செய்த பணி நித்திய தேவனால் அளிக்கப்பட்டது என்பதையும் மறுக்க முடியாது. ஜீவாதிபதியாகிய இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று பேதுருவும், யோவானும் பிரசித்தம் பண்ணினார்கள். நமது ஆண்டவர் பரிசேயருக்கு யோனா 3 நாட்கள் பூமியின் ஆழங்களிலிருந்து விட்டு வெளியே வந்தது போல மனுஷகுமாரனும் மூன்று நாட்கள் பூமியின் இருதயத்தில் இருப்பதாகக் கூறியிருந்தார். அவரது உயிர்த்தெழுதல் அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை நிரூபிக்கிறது. தேவ வல்லமை அவரிடமிருந்தது. அவர் பிதாவோடு உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே ஒரு உடன்படிக்கை பண்ணியிருந்தார். அதன்படி பாவநிவர்த்தி செய்து மீட்பை ஏற்படுத்தினார். அவரது உயிர்தெழுதல் இதனை உறுதி செய்தது. மேலும் உயிர்த்தெழுதல் இரண்டாம் ஆதாம் நித்திய உடன்படிக்கையில் தமது பங்கை நிறைவேற்றியதற்கும் முத்திரையாயிருக்கிறது. அவரது இரத்தம் நித்திய உடன்படிக்கையின் இரத்தமாகவும், அவரது உயிர்த்தெழுதல் அதற்கு முத்திரையாகவுமிருக்கிறது. ரோமர் 6:4-ல் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்று படிக்கிறோம். நித்திய தேவனுடைய மகிமை குமாரனில் வெளிப்பட்டது. நாம் உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பார்க்க முடிகிறது. முற்காலத்தில் பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்பட்ட விசுவாசம் சந்தேகமின்றி இங்கு நிரூபிக்கப்பட்டது. எனவே தேவகுமாரனாகிய நசரேயனாகிய

(5-ம் பக்கம் பார்க்க)

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(4-ம் பக்க தொடர்ச்சி)

இயேசுவின் அதிகாரம், வல்லமை, மகிமை ஆகியவற்றிற்கு இது அத்தாட்சியாயிருக்கிறது. இந்த அத்தாட்சி அப்போஸ்தலர்களின் மனதில் மிக வல்லமையுடனிருந்தபடியால் அவர்கள் மிகுந்த தைரியத்துடன் வசனத்தைப் பிரசங்கித்தனர். இவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்தவர்கள். அவர்களிலொருவன் அவரது ஆணி பாய்ந்த கரங்களில் தன் விரலையும், ஈட்டி பாய்ந்த விலாவில் அவனது கையையும் இட்டுப் பார்க்க விரும்பினான். பலர் அவரோடு உணவருந்தினர். அனைவருக்கும் அவர் மரித்தது தெரியும். அவரை வைத்த கல்லறையினை அவர்கள் கண்டனர். ஆனால் அவர் இப்போது உயிரோடிருப்பதைக் கண்டு அவர் பேசியதைக் கேட்டனர். பொரித்த மீன் கண்டத்தையும், தேன் கூட்டுத் துணிக்கையையும் அவரோடு பகிர்ந்து கொண்டாரே, அது ஆச்சரியமல்லவா! பேதுருவும் மற்றவர்களும் "இந்த இயேசுவை தேவன் உயிரோடெழுப்பினார், அதற்கு நாங்கள் சாட்சிகள்" அப்.2:32 என்று கூறி அறிவித்தனர். ஏனெனில் கல்வாரியில் மரித்த அவர் இப்போது ஜீவனோடிருப்பதால் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகக் கூறாமலிருக்க முடியவில்லை. எதிரிகள் இவர்களது தைரியமான சாட்சியைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். எந்த சந்தேகமும் ஏற்படத் தேவையில்லாதிருந்தது. அவர் எழுந்தது நிச்சயமானபடியால் அவரே மேசியா என்றும் மனிதரின் இரட்சகர் என்றும் உறுதிகொண்டனர்.

எனவே எதிர்ப்புகளையும், பாடுகளையும், மரணத்தையும் துச்சமாக எண்ணினர். மிக நிச்சயமான ஒரு உண்மையை எப்படி விசுவாசியாமலிருக்க முடியும்? மிக முக்கியமான செய்தி தங்களுடன் வாழுகிறவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்க அதை எப்படி சந்தேகிக்க முடியும்! எனவே அவர்கள் எல்லா இழப்புகளையும் சகித்து, பாடுகளை அனுபவித்தனர். விசுவாசத்தில் அவர்கள் பின்வாங்கவில்லை. நாடுகடத்தப்படுதல், சிலுவையில் அறைதல், கம்புகளில் கட்டப்பட்டு உயிரோடு எரிக்கப்படுதல் இவை அவர்கள் பெற்ற தண்டனைகள். ஆனாலும் அவர்களது விசுவாசம் அசைக்கப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக, அணி அணியாக இரத்த சாட்சிகள் எழும்பினர். அவர்கள் கர்த்தருடைய நித்திய வாழ்வில் உறுதியாகவும் சுவிசேஷத்தில் பூரண நம்பிக்கையுடையவர்களாகவுமிருந்தனர்.

இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சான்றுகளின் வல்லமையைக் காண்கிறோம். நீங்களும் கூட இப்போது அதனை உணரலாம். அவர் நமக்காக மரித்துப் பின் உயிரோடெழுந்து பாவிகளுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இதை விசுவாசித்துத் தெளிவாக உணர்ந்து கொண்டால் உங்கள் இருதயம் இளைப்பாறுதலடையும். அப்போது ஆண்டவரின் நாமத்தில் சாட்சியாயிருப்பீர்கள். இயற்கையில் மென்மையான நீங்கள் சிங்கத்தைப் போல வலிமையான சாட்சியாக மாறுவீர்கள்.

2. நாம் அவருடைய உயிர்த்தெழுதலில் நீதிமான்களாக்கும் வல்லமையில் வாழ முடியும்

கிறிஸ்து இயேசு நமது பதிலாளியும் பலியுமானவர். இவ்வுலகில் வந்த அவர் தம்மைப் பலியாக செலுத்தி தமது கடமையை நிறைவேற்றிவிட்டார். அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட படியினாலே மரணத்தை முற்றிலும் அனுபவித்தார். இனி அவர் செய்ய வேண்டியது எதுவுமில்லை. இதை எண்ணிக் களிகூருவோம். நியாயப் பிரமாணத்தை மீறியதால் வந்த தண்டனைக்குரிய கிரயம் செலுத்தியாயிற்று. அவர் உயிரோடெழுந்து விட்டதால் அதற்குரிய அச்சாரமும் கிடைத்து விட்டது.

'எல்லாம் முடிந்தது' என்று சிலுவையில் அவர் கூறினார். அது சத்தியம். பிதா அவரது உரிமையை அவரை உயிரோடெழுப்பி உறுதிப்படுத்தினார். இந்தப் பூரண நீதியின் ஒப்பற்ற அங்கியைத் தரித்துக்கொண்டு சந்தோஷப்படுங்கள். கிறிஸ்து இயேசுவினால் நீதிமான்களாக்கப்பட்டுவிட்டீர்கள். தேவ பார்வையில் நியாயப் பிரமாணத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவர்கள் போன்று நீதிமான்களாகிவிட்டீர்கள். ''விசுவாசிக்கிற எவனுக்கும் நீதியுண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" யோவா.10:6. இவ்விதமாய் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். ரோமர் 5:1.

இயேசு மரணத்தை வென்று உயிரோடெழுந்தபடியால் மிகுந்த சமாதானம் நமது இருதயங்களை நிரப்புகிறது. மன்னிப்பை பெற்று நீதிமான்களாவதோடு நாம் அங்கீகாரமும் பெறுகிறோம். ''..... இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" எபே.1:6.

3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஜீவனளிக்கும் வல்லமை:

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" யோவா.11:25 என்று இயேசு கூறினார். கிறிஸ்துவும் ஜீவனும் ஒன்றே. உங்களில் இயேசு வாழ்ந்தால் உங்களுக்கு உயிர்த்தெழுதல் உண்டு. அவரிலுள்ள அனைத்து வல்லமைகளும் அவரது ஜனங்களுக்கு உண்டு. ஏனெனில் 'சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கிறது' கொலோ.1:19. "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" யோவா.1:16. கிறிஸ்துவிலுள்ள ஜீவனை அவர் தனது சரீரமாகிய சபையின் அனைத்துப் பகுதிகளுக்கும் பாய்ந்து ஓடச் செய்கிறார். "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" யோவா.11:19. கிறிஸ்து தந்த ஜீவனுக்காக வெற்றி கொண்டாடுவோம்.

நாம் இயேசுவை விசுவாசிக்கும் போது அவரிடமிருந்து புது வாழ்வினைப் பெற்று மேன்மை அடைகிறோம். ஆவிக்குரிய வாழ்வு இயற்கையின் வாழ்வோடு தொடர்புடையதல்ல. அது இன்னொரு ஆதாரத்திலிருந்து ஆரம்பித்து வேறு திசை நோக்கிச் செல்லுகிறது. பழைய வாழ்வு முதல் ஆதாமின் சாயலை உடையது. பழைய வாழ்வு நம்மிலிருந்தால் அது ஒரு வகையான மரணத்தை அடைகிறது. தேவன் தரும் புது வாழ்வு உண்மையானது. அது புதிய சிருஷ்டியின் பகுதி. அது நம்மைப் பரலோகத்துடனும், தெய்வீகத்துடனும் இணைக்கிறது. பழைய வாழ்வு எதிர்க்கப்படுகிறது. தேவ கிருபையால் தீய வாழ்வு மேலோங்குவதில்லை. புதிய ஜென்மத்தால் ஏற்படும் மாற்றம் அற்புதமானது! உங்கள் தன்மைகள் தூய்மையாக்கப்பட்டு உயர்த்தப்படுகின்றன. அதே வேளையில் ஆவிக்குரிய தன்மைகள் தரப்பட்டு புதிய இருதயமும் சரியான ஆவியும் நம்மில் குடியேற்றப்படுகின்றன. உயிர்த் தெழுந்த கிறிஸ்து முற்றிலும் புதிதான ஒரு வாழ்வைத் தருகிறார்.

4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆறுதல் படுத்தும் வல்லமையைத் தருகிறது:

நமது ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழுந்தபடியால் அவரைப் பின்பற்றுகிற நாமும் உயிரோடெழும்புவோம். மரித்தவர்களின் முதற்பலன் கிறிஸ்து. பூமியில் கல்லறைகள் பெருகிவிட்டன. மரித்தவர்களின் தூள் குவியலாக்கப்படுகிறது. ஆனால் இயேசு கல்லறையிலிருந்து எழுந்தபடியால் அவரில் வாழுகிற நாமும் உயிரோடு எழும்புவது நிச்சயம். தேவ பிள்ளைகளின் ஆத்துமாக்கள் ஆண்டவரோடு நித்தியமாக வாழுவதால் விசாரம் வேண்டியதில்லை. தேவ எக்காளம் தொனிக்கும்போது அவர்களது சரீரம் கல்லறையை விட்டு எழும்பும். எனவே இயேசுவின் வெறுமையான கல்லறை நமக்கு இனிமையை அளிக்கிறது. "தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" 1 கொரி.6:14.

துன்புறுத்தப்பட்ட பரிசுத்த வான்களுக்கு இது ஆறுதலை அளிக்கிறது. பவுலின் காலத்தில் கிறிஸ்தவர்கள் அதிகமாகத் துன்புறுத்தப்பட்டனர். சிறைவாசம் குறைந்த தண்டனையாயிருந்தது. வாரினால் அடிக்கப்படுவதும் சித்திரவதை செய்யப்படுவதும் அவர்கள் பங்காயிருந்தது.அரங்கங்களில் கிறிஸ்தவர்களை சிங்கங்களுக்கு இரையாக்கினர். கிறிஸ்தவர்களின் உடல்களில் தலை முதல் கால் வரை கீல் பூசி அக்கினிக்கு இரையாக்குவது வேடிக்கையாயிருந்தது. இத்தகைய காலங்களில் ஆறுதலளிப்பது சிலுவை மட்டுமே. அவர்கள் உயிர்த்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தெழுந்து அவரோடு அவரது மகிமையில் பங்கடைவது எத்தனை ஆறுதல்! அவர் கள் கொல்லப்பட்டாலும் அழிந்து போவ தில்லை. ஏனெனில் இயேசு மறுபடி யும் வாழ்ந்தபடியால் அவர்கள் சரீரம் மறுபடி யும் வாழும். குருசிலறையப்பட்டு கொல்லப்பட்ட அவரை நம்புகிற மக்களுக்கு நம்பிக்கையுண்டு.

உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவமாக்குங்கள்

நீங்கள் உயிர்த்தெழுதலின் வல்ல மையை உணர வேண்டுமென வாஞ்சிக் கிறேன். அனேகக் கிறிஸ்தவர் கள் இந்த வல்லமையை அறியாமலிருக்கிறார்கள். நம்மிலும் அனேகர் சடங்காசாரமான கிறிஸ்தவர்கள். வெளித்தோற்றத்தில் மட்டும் கிறிஸ்தவர்களாயிருப்பதால் நம்மில் வல்லமையில்லை. தேவனுடைய வல்லமையின் சத்தியத்தைக் கேட்கிறவர் களாக மட்டுமல்ல, அதன் விசையை உணருகிறவர்களாகவுமிருக்க வேண்டும். உங்கள் முன்னால் வைக்கப்பட்ட ஆவிக் குரிய உணவை புகழுவதல்ல அதனை உண்டு அதனால் ஏற்படும் சக்தியை அறிந்து கொள்ளுங்கள். உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையை அறியாமல் அதைக் குறித்து பேசவேண்டாம். தேவன் தாமே தமது வல்லமையால் உங்களை நிரப்புவாராக.

சிலுவையிலறையப்பட்ட இயேசுவை நோக்கி பார்ப்போம்

Beholding the crucified Christ

Authur W. Pink

"அவரை சிலுவையில் அறைந்த பின்பு ..... அவர்கள் அங்கே உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்" மத்.27:35-36.

இது உரோமப் போர்ச் சேவகர் களைக் குறித்து சொல்லப்பட்டது. என்பது யோவா.19:23-ல் தெளிவாகக் கூறப்பட்டு மத்.27:54-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது. பிலாத்து என்ற தேசாதிபதி இயேசுவுக்கு மரண ஆக்கினை வழங்கி இவர்களது கரத்தில் அவரை ஒப்புவித்தான் மத்.27:26-27. இவர்கள் கொடிய வெறுப்புடன் பணியிலீடுபட்டனர். பரிகாசமாக சிவப்பு அங்கியை அவருக்கு உடுத்தி தலையில் முட்கிரீடம் தரித்து, யூதருடைய ராஜா என்று வாழ்த்தினர். அவர் முகத்தில் துப்பி கோலால் அடித்து பரிகாசம் செய்தனர். பின்பு அவருடைய ஆடையை அணிவித்து கொல்கதா நடத்திச் சென்று அங்கு சிலுவையில் அறைந்தனர். அவரது வஸ்திரங்கள் பங்கிடப்பட்டன. யாரேனும் அவரை எடுத்துச் செல்ல வந்துவிடுவார்களோ என்ற எண்ணத்தில் அவருக்கு உயிர் இருந்தமட்டும் அவரைக் காவல் காத்தனர்.

அவர்கள் பார்த்தவை எவை?

1. சரித்திரத்தில் மிகவும் அதிசயமான நிகழ்ச்சியைப் பார்த்தனர். அது மனித கண்களுக்கு பிரமிப்பைத் தூண்டுவதாகவும், பயங்கரமாயினும் ஒரு ஒப்பற்ற செயலாகவு மிருந்தது

தேவனுடைய அவதாரமாகிய இயேசு பொல்லாதவர்களின் கையால் கொல்லப்பட்டாலும் இரட்சகராகிய அவர் தம்மை தனக்கு விரோதமாக எழும்பியவர்களிடம் தாமே ஒப்புக் கொடுத்தார் என்பது சத்தியம். போர்வீரர்களுக்கு ஒரு குற்றவாளியை இவ்வாறு நடத்துவது சாதாரணமானது. சுவிசேஷத்தைக் கேட்கிற அனேகருக்கும் இது சாதாரணமாயிருக்கலாம். போர்வீரர் அவரை ஒரு சாதாரண யூதனாக எண்ணினர். இன்றும் திரளான மக்கள் விரும்பத்தக்க ரூபத்தை அவரில் காண வில்லை. அவரது நீதி புறக்கணிக்கப்பட்டு அவரது செங்கோல் உதாசீனப் படுத்தப் படுகிறது அவரது இரத்தம் தேவையற்ற தாக உணரப்படுகிறது.

2. சிலுவையிலறையப்பட்ட இயேசுவில் ஒப்பில்லாத பரிபூரணத்தை கண்டனர்

இவ்வகையான சூழலில் பிற குற்றவாளிகள் நடந்து கொள்வதை விட மிக வேறுபாடுடன் இரட்சகர் தம்மைக் காண்பித்ததை அவர்கள் கண்கூடாகக் கண்டனர். எதிரிகளை அவர் சபிக்க வில்லை, அவர்களை எதிர்க்கவில்லை, தீமையான வார்த்தைகளைப் பேச வில்லை. மாறாக அவருடைய உதடுகளிலிருந்து, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" லூக்.23:24 என்ற ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. சிலுவையிலிருந்து கொண்டே தனக்குத் தவறு இழைத்தவர்களுக்காக அவர் மன்றாடியது அப்போர்வீரர் களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவரது இரு பக்கங்களிலும் அறையப்பட்ட இரு கள்வர்களும் அவரை பரிகசித்தனர் மத்.27:44. ஆனால் பதினோராம் மணி வேளையில் அவர்களிலொருவன் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைப் பெற்றான் அப்.11:18. அவன் இயேசு விடம் "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும் பொழுது அடியேனை நினைத்தருளும்" என மன்றாடினான் லூக்.23:42. அவனது விண்ணப்பம் மறுக்கப்படவில்லை. அவன் பொல்லாத பாவிதான். ஆனால் இரக்கமுள்ள இயேசு, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" வச.43 என்றார். ஈடு இணையற்ற தெய்வீகக் கிருபை மிகப் பெரிய பாவிக்குக் காண்பிக்கப் பட்டதை காணமுடிந்தது.

3. மிக மேன்மையும் இரகசியமுமான சத்தியத்தை அவர்கள் கண்டனர்

போர்வீரர்கள் அவரைக் 'காவல் காக்க' உட்கார்ந்தனர். சிறிது நேரத்தில் அவர்களால் அது கூடவில்லை. நடுப்பகல் வந்தபோது "ஆறாம் மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டா யிற்று" மத்.21:45. இது சூரியன் இந்தக் காட்சியைப் பார்க்க மறுப்பது போலவும், இயற்கை இக்காட்சியைக் கண்டு புலம்புவது போலவுமிருந்தது. இந்த மூன்று மணி நேரங்களுக்குள்ளாக தேவனுக்கும் குமாரனுக்குமிடையில் ஒரு பரிமாற்றம் நடந்தது. அது மாம்ச கண்களால் காணக்கூடாத அளவிலான பரிசுத்தமானதும், மானிட இருதயம் புரிந்து கொள்ள முடியாத ஒரு இரகசிய முமாம். குமாரன் தமது ஆவியைப் பிதாவின் கரங்களில் ஒப்புவித்தார். அப்போது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் மிகவும் அதிர்ந்தது; கன்மலைகளும் பிளந்தன; கல்லறைகளும் திறவுண்டன மத்.27:51-52. பாடுபடும் தாசனாகிய இவர் சாதாரண மானவரல்ல; வானத்தையும் பூமியையும் படைத்தவர். எனவே அவை தங்களது வருத்தத்தைத் தெரிவித்தன. "நூற்றுக்கு அதிபதியும் அவனோடே கூட இயேசுவை காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும், சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்" மத்.27:54.

இங்கு நாம் காண்பது என்ன?

1. மனிதனுடைய குணாதிசயம் வெளிப் படுவதை நாம் காணலாம்

"கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது" எபே.5:13. கிறிஸ்து உண்மையான ஒளி யோவா.1:9. அவர் முக்கியமானவற்றையும், தெய்வீக காரியங்களையும் வெளிப்படுத்துகிற ஒளி. அவருக்கு முன்பாக சகல மக்களும், பொருட்களும் வெளியரங்கமாயிருக் கின்றன. மானிட வீழ்ச்சியின்போது வாக்களிக்கப்பட்ட வேதவாக்கியம் கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டது. "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமா யிருக்கிறது" எரே.17:9. திருக்குமார னாகிய இயேசுவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை இதன் மூலம் விளங்குகிறது. அவர் இவ்வுலகில் பிறந்த உடனேயே அவரைக் கொல்லுவதற்கான முயற்சிகள் ஆரம்பித்தன. அவர் நன்மை செய்கிற வராகச் சுற்றி நடந்தும் அவர் அங்கீகரிக் கப்படவில்லை. "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" மத்.9:20 என்று அவர் கூறினார். ஒருமுறை "..... தங்கள் எல்லைகளை விட்டுப் போகும் படி அவரை வேண்டிக் கொண்டார்கள்" மத்.8:34.

(7-ம் பக்கம் பார்க்க)

பிள்ளைகளின் குணங்களை உருவாக்குவதில் பெற்றோருக்கு இணையானவர்கள் எவரு மில்லை. அவர்கள் பிள்ளைகளை நல்ல தாக்கங்களோடு நடத்தினால் சந்தோஷமான பலன்களை பிள்ளைகளின் வாழ்வில் காணமுடியும்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அவரை வரவேற்காதது மட்டுமல்ல, காரணமின்றி அவரைப் பகைத்தனர் யோவா.15:25. அவரைப் புகழவும், ஆராதிக்கவும் ஏதுவான காரணங்கள் அனேகமிருந்தன. ஆனால் மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை ரோமர் 8:7. கல்வாரியில் தேவன் மீதுள்ள பகை மக்களால் காண்பிக்கப் பட்டது. சிலர் மனோபாவனையில் தேவனை ஆராதிக்கின்றனர். ஆனால் உண்மையாக அவரை ஆராதிப்ப தில்லை, உலகத்திலிருந்தே அவரை அகற்றிவிட முயற்சிக்கிறார்கள். இது கிறிஸ்துவை அவர்கள் கொலை செய்த தின் மூலம் விளங்குகிறது. தேவனாகிய அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் 1 தீமோ.3:16. அவரைக் கொன்றதின் மூலம் மனிதனின் அக்கிரம இருதயம் வெளிப்படுகிறது. அவனது பாவம் கருமையிலும் கருமையானது. எனவே மனித சரித்திரம் கண்ணீராலும், இரத்தத்தாலும் எழுதப்பட்டுள்ளது.

2. இங்கு பாவம் வெளிப்படுத்தப்படுவதைக் காண்கிறோம்:-

பாவம் தேவன் அருவருக்கிற ஒன்று எரே.44:4. ஆனால் அதைச் செய்கிறவர்கள் அதனை மிகவும் இலகுவாக எடுத்துக்கொள்கின்றனர். அது நமது ஆதிப்பெற்றோரை ஏதேனி லிருந்து துரத்தி, இன்றைய அனைத்து வேதனைகளுக்கும் நம்மை ஏதுவாக்கி யிருக்கிறது. அது குழப்பங்களையும் இரத்தம் சிந்துதலையும் ஏற்படுத்தி, நாம் ஜீவிப்பதற்கான இந்த பூமியைக் கல்லறை பூமியாக மாற்றிவிட்டது. பூதாகரமான பாவம் சாக்குப்போக்குகளால் நடத்தப் பட்டு வருகிறது. சாத்தான் தனது தந்திரமான கவர்ச்சிகளை பயன்படுத்தி மக்களை இழுத்துக் கொள்கிறான்.

தேவ குமாரன் இவ்வுலகில் வந்த முக்கிய நோக்கங்களில் ஒன்று இருளில் மறைந்திருக்கும் பொருட்கள் மீது வெளிச்சம் காண்பிப்பதாகும். தேவ பிரசன்னம் நீண்டகாலம் பயன்படுத்தப் படாத ஒரு அறையில் மிகப் பிரகாசமான ஒளியினைச் செலுத்துவது போன்ற தாகும். அங்கிருக்கும் அசுத்தமெல்லாம் வெளியாகிவிடுமே. "நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது, இப் பொழுதோ, தங்கள் பாவத்தைக் குறித்துப் போக்குச்சொல்ல, அவர் களுக்கு இடமில்லை" யோவா.15:22.

காலாகாலமாக மனிதன் பொல் லாப்பை நடப்பித்தாலும், இம்மானு வேல் இவ்வுலகில் வந்தபடியால் அவை அனைத்தும் பரிகரிக்கப்பட்டுவிட்டன. அவர் மனிதர் கைகளில் அடைந்த கொடூரமானது மனித பாவத்தின் உச்சநிலை, தேவனுக்கு எதிரான வெறுப்பாகவும், புரட்சியாகவும் வெளிப்படுகிறது. கல்வாரியில் பாவத்தின் உச்சகட்டமும், அதன் நீண்ட போக்கும் தெளிவாகத் தெரிகின்றன. ஏதேனில் முளைத்த பாவம் கல்வாரிச் சிலுவையில் உச்சநிலையை எட்டுகிறது.

பாவம் மட்டுமல்ல, அதற்கான பயங்கர சம்பளமாகிய மரணத்தையும் இங்கு காண்கிறோம். மரணம் மற்றும் தேவனை விட்டுப் பிரிக்கப்படுவது மாகிய சம்பளத்தை அவர் ஏற்றுக் கொண்டார். அவர் பாவத்தைச் சுமப்பவ ராகச் சிலுவையில் தொங்கினபடியால் அவரை விசுவாசிக்கிற அனைவருக்கும் உரிய தண்டனை அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. நாம் தேவனுடைய குணாதிசயம் வெளிப்படுத்தப்படுவதைக் காண்கிறோம்:

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியை களை அறிவிக்கின்றது" சங்.19:1. ஆனாலும் அவருடைய பரிபூரணம் சிலுவையில் காண்பிக்கப்பட்டது போல இத்தனை தெளிவாக வேறு எங்கும் காண்பிக்கப்படவில்லை.

அவருடைய பரிபூரண பரிசுத்தத் தைப் பாருங்கள், அது எத்தனை மகிழ்வானது! அவரில் காணப்படும் பண்புகளெல்லாம் தூய்மையானவை களும், அழகானவை களுமாகும். எனவே அவர் தீமையான எதனையும் வெறுத்து தள்ளுகிறார். பாவமிருக்குமிடத்தை வெறுப்பதில் எந்த பட்சபாதமுமில்லை. எனவேதான் நமது பாவங்கள் கிறிஸ்து மீது சுமத்தப்பட்டபோது தமது தூய்மை யான கோபத்தை அவர் மீது காண்பித் தார். தேவனைக் குறித்து, தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே என்று ஆபகூக்1:13-ல் குறிப்பிடப்படுகிறது. தமது முதுகை அவருக்குத் திருப்பியபடியால்தான் அவர், "என் தேவனே, என் என்னைக் கைவிட்டீர்" என்று கதறினார்.

4. தேவனுடைய மாறாத நியாயத்தைக் காண்கிறோம்

தேவனுடைய பிரமாணத்தின் படி 'பாவம் செய்கிற ஆத்துமா சாகும்' எசேக்.18:4. யாத்.26:7-ல் யெகோவா குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாதவர் என்று கூறப்பட்டுள்ளது. இயேசுக் கிறிஸ்துவோ 'குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி' 1 பேது.1:19. பிறப்பிலும், வாழ்விலும் பாவமில்லாத அவர் மீது தமது ஜனங்களின் பாவம் சுமத்தப்பட்டது. "தம்முடைய சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம்மெல் லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத் தார் ரோமர் 8:32. பாவம் அவர் மீது சுமத்தப்பட்டதால் "பட்டயமே என் மேய்ப்பன் மேலும், என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு" சக.13:7 என்ற தீர்க்கரின் உரை நிறைவேறியது. தேவன் பட்சபாதமில்லாதவர் 1 பேது.1:17. எனவே குற்றங்களை ஏற்றுக்கொண்ட நேசகுமாரனை பட்சபாதமாக விட்டு விடவில்லை.

5. இங்கு தேவனுடைய அற்புதமான கிருபையைக் காண்கிறோம்

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்" ரோமர் 5:8. அவர் ஆதாமின் சந்ததி முழுவதையும் தண்டித்திருக்கலாம். நாம் அனைவரும் அதற்குத் தகுதியுடையவர்கள். ஏற்கெனவே நாம் வழிவிலகிக் கெட்டுப் போனவர்களாயிருக்கிறோம். அவரை நேசிக்காமலும், அவரது மகிமையைத் தேடாமலும் இருக்கிறோம். ஆனால் அவர் தமது சொந்த நற்குணத்தாலும், தமது கிருபையாலும் தமது ஜனங்களை அவர்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்க, எபேசி.1:5-ன் படி "தாம் நமக்குத் தந்தருளின கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக" இதனைச் செய்தருளினார். அவர்களை எரிகிற சூளையிலிருந்து தப்புவிக்கப்பட்ட கொள்ளியாகவும் அவருடைய இரக்கத்திற்கு அடையாள மாகவும் நம்மைத் தெரிந்தெடுத்தார்.

6. தேவனுடைய பல்வேறுவிதமான ஞானம் இங்கு விளங்குகிறது:

"தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமான ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை" வெளி.21:27. அப்படியானால் என் போன்ற ஒருவர் பரம எருசலேமில் பிரவேசிப்பது எப்படி? நீதியே அற்றவனும், அநீதி நிறைந்தவனு மான நான் தெய்வீக அங்கீகரிப்பைப் பெறுவது எப்படி? பாவம் செய்கிற ஆத்துமா சாகும். நான் எப்படித் தண்டனைக்குத் தப்ப முடியும்?

மனித ஞானம் இந்தப் பிரச்சனைகளைத் தீர்வு செய்ய முடியாது. இரக்கத்தின் மூலம் செல்ல நியாயம் ஒத்துப் போவதில்லை. ஆனால் சிலுவையின் தெய்வீகப் பரிபூரணம் இணைந்து செயல்படக் கூடும். "கிருபை யும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும். கிறிஸ்துவின் இரத்தம் எந்த அழுக்கையும் சுத்தம் செய்யக்கூடியது. அவரது ஞானம் இவ்வாறு சிலுவையில் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக விளங்குகிறது.

கிறிஸ்துவினால் தேவனுக்கு முன்பாக நான் தைரியமாக நிற்க முடிகிறது. அவரது பரிபூரணத்தால் நான் உடுத்துவிக்கப்படுகிறேன் ஏசா.61:10. மீட்கப்பட்ட தேவ சபையார் கிறிஸ்துவைக் குறித்து, "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்" ஏசா.53:5 என்றும் "அவர் தாமே தமது சரீரத்தில் நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்பு களால் குணமானீர்கள்" 1 பேது.2:24 என்றும் படிக்கிறோம். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" கலா.2:20.

"விசுவாசம்" என்னும் பதத்தை அப்போஸ் தலரில் ஏறக்குறைய 50 தடவை காணலாம். அவரை விசுவாசித்துப் பற்றிக் கொண்டவர்கள் "விசுவாசிகள்" என்று அழைக்கப்பட்டனர்.

நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்கான நிரூபணம்

Our Lord's resurrection - The Proof

வெறும் கல்லறை : "அவர்கள் உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல் ..... பேதுருவோ எழுந்திருந்து கல்லறையினிடத்திற்கு ஓடி அதற்குள்ளே குனிந்து பார்க்கையில் சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக் கண்டு சம்பவித்ததைக் குறித்து தன்னில் ஆச்சரியப்பட்டுக் கொண்டு போனான்" *லூக்.24:3-12; யோவா.20:4-9.*

தூதரின் சாட்சி: "தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி, நீங்கள் பயப்படாதிருங்கள், சிலுவையிலறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன், அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" *மத்.28:2-8.*

மகதலேனா மரியாளுக்கு இயேசு காணப்பட்டது : "..... அவள் அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணி ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும்; நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து ரபூனி என்றாள். அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்" *யோவா.20:11-18.*

ஸ்திரீகளுக்கு அவர் காணப்பட்டார் : "அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு 'வாழ்க' என்றார். அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள்" *மத்.28:9.*

பேதுருவுக்கு அவர் தரிசனமானார் : "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்கு தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டு....." *லூக்.24:34.*

எம்மாவூருக்குப் போன சீஷர்கள் அவரைக் கண்டனர் : "அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்து போனார்." *லூக்.24:13-35.*

பதினொரு சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்தார் : "அதன்பின்பு பதினொரு வரும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி உயிர்த்தெழுந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் விசுவாசியாமற் போனதினிமித்தம் அவர்களைக் கடிந்து கொண்டார்" *மாற்கு.16:14.*

தோமாவுக்குக் காட்சி : "மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்கு சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவைப் பார்த்து, நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக என் ஆண்டவரே, என் தேவனே என்றான்" *யோவா.20:24-31.*

இயேசு கலிலேயாவில் தம்மைக் காண்பித்தார் : "இவைகளுக்குப் பின்பு, இயேசு திபேரியாக் கடற்கரையில் மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்" *யோவா.21:11.*

யாக்கோபுக்குத் தம்மை காண்பித்தார் : "..... பின்பு யாக்கோபுக்கும் அதன் பின்பு, அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்" *1 கொரி.15:6.*

அவர் பரத்துக்கேறிச் சென்றார் : "இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது" *அப்.1:9-11.*

தூய ஆவியானவர் இறங்கினார் : "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" *அப்.2:32-33.*

அப்போஸ்தலர்களின் சாட்சி : "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள்" *அப்.4:33; அப்.2:24, 36; 3:15, 14:10; 5:30-31; 10:40, 41; 13:30, 37.*

சபையின் வளர்ச்சி: "பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்றே பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம் ..... இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" *2 கொரி.5:15, 17.* "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்தது உண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" *கொலோ.3:1-13, கலா.2:20, எபேசி.2:10.*

ஸ்தேவான் கண்ட காட்சி: "அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு, இதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்" *அப்.7:55-56.*

பவுலுக்குக் கொடுக்கப்பட்ட காட்சி : "எல்லாருக்கும் பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" *1 கொரி.15:8.*

யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது : "நான் அவரைக் கண்ட போது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன். அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என்மேல் வைத்து என்னை நோக்கி பயப்படாதே, நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்....." *வெளி.1:10-19.*

கிறிஸ்துவின் சாட்சி : "மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், நான் மரணத்திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோலை உடையவராயிருக்கிறேன்" *வெளி.1:18; 5:5-10.*

வேத வசனங்களின் சாட்சி : "முந்தி கல்லறையினிடத்துக்கு வந்த மற்ற சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து கண்டு விசுவாசித்தான். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டுமென்ற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்" *யோவா.20:8-9; லூக்.24:44-45; எபேசி.1:20-22; 4:9-10; எபி.1:3; 10:12-13; 1 பேது.3:18,22.*

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Book Packets contains periodicals

To